
## இதுவரை 30 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.3 கோடி!


## சாலை விபத்தில் உயிரிழந்த கழகத்தினரின்

# 3 குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம் வீதம் - ரூ.30 லட்சம் !

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!







**சென்னை, ஆக. 14-**

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்; சாலை விபத்தில் மரணமடைந்த ஈரோடு வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த சுரேஷ்குமார், சேலம் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த எம்.செந்தில்குமார், விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த வி.ராஜ்கிரண் ஆகிய 3 குடும்பங்களுக்கு தி.மு.க. சார்பில் தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் 30 இலட்சம் ரூபாயினை நேற்று முன்தினம் (12.8.2026) குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார். இதுவரை 30 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.3 கோடி வழங்கப்பட்டுள்ளது.**

இதுகுறித்து தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப்பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்." என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா - இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க.முத்தமிழ்ச்செல்வன் - ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன் - திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.விக்னேஷ் - கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.ராம்பிரசாத் - நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரண்ராஜ் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். பிரகாசம் - திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.மேகலிங்கம் - சேலம் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.முருகன் - விழுப்புரம் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த மு.இராமதாஸ் - நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரவணகுமார், ஈரோடு வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த எம்.லிங்கேஸ்வரன் - மதுரை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த என்.திருப்பதி - நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஜி.முத்து ராஜா - இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நா.மாரிமுத்து - திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி பார்வதி (எ) உஷா - திருப்பூர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த இ.பரத்குமார் - தேனி தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த ப.மணிகண்டன் - ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வி.கோபாலகிருஷ்ணன் - தருமபுரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.சண்முகம் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த என்.கார்த்திக் - திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எம்.முத்து சுரேஷ் ராஜா - விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.விக்னேஷ்ராஜ் - ஈரோடு தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கல்வெட்டுபாளையம் பி.சரவணன் மற்றும் சூரம்பட்டி த.விஜயகுமார் - கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.ராமமூர்த்தி ஆகிய 27 குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து;

ஈரோடு வடக்கு மாவட்டம், பவானி நகரத்தைச் சேர்ந்த சுரேஷ்குமார் 17.08.2025 அன்று கவுந்தப்பாடிபவானி சாலையில், பூலப்பாளையம் பிரிவுக்கு அருகில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது வேன் மோதிய விபத்தில் சிக்கியும் சேலம் மத்திய மாவட்டம், சேலம், சின்னகொல்லப்பட்டி சேர்ந்த எம்.செந்தில்குமார் கடந்த 12.7.2025 அன்று ஏற்காடு மெயின் ரோடு, சப்தகிரி டவர் எதிரே கார் மோதிய விபத்தில் சிக்கியும் விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனம், மாரிச்செட்டி குளத்தைச் சேர்ந்த வி.ராஜ்கிரண், கடந்த 23.3.2026 அன்று சென்னையிலிருந்து தனது ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, வண்டலூர் உயிரியல் பூங்கா அருகே லாரி மோதி விபத்தில் சிக்கியும் உயிரிழந்த

**இந்த 3 பேரின் குடும்பங்களுக்கும் குடும்ப நிவாரண நிதியாக, தலா ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,**

**ஈரோடு வடக்கு மாவட்டம், பவானி நகரத்தைச் சேர்ந்த சுரேஷ்குமார் மனைவி திருமதி ரம்யா அவர்களிடமும் சேலம் மத்திய மாவட்டம், சேலம், சின்னகொல்லப்பட்டி சேர்ந்த எம்.செந்தில்குமார் மனைவி திருமதி செ.தமிழ்ச் செல்வி அவர்களிடமும் விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனம், மாரிச்செட்டிகுளத்தைச் சேர்ந்த வி.ராஜ்கிரண் மனைவி திருமதி ஆர். மாலதி அவர்களிடமும் நேற்று முன்தினம் (12.8.2026) காலை வழங்கினார்.**

## தொகுதி மறுவரையறை: சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பேச்சு! ...

முதல் பக்கத் தொடர்ச்சி

முடிவாக எடுக்கப்பட்டது. அதையடுத்து, அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை, எங்களின் தலைவர், அப்போதைய முதலமைச்சர் அவர்கள், மார்ச் 24ஆம் தேதி இதே சட்டமன்றத்தில் விளக்கிக் கூறினார்கள்.

இந்த ஆண்டு ஏப்ரல் 16ஆம் தேதி அந்த மசோதாவின் நகலை, தமிழ்நாடு எங்கும் எரித்து, எங்களின் எதிர்ப்பை நாங்கள் வெளிக்காட்டினோம். அப்போதைய முதலமைச்சர், எங்கள் தலைவர் அவர்களே அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு, தொகுதி மறுவரையறை மசோதாவை எரித்தார்கள்.

அந்த மசோதா தோற்கடிக்கப்பட்டதை, இந்தத் தீர்மானத்தில் இந்த அரசு குறிப்பிட்டுள்ளது. அந்த மசோதாவுக்கு, நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் காட்டிய எதிர்ப்புதான், அந்த மசோதா பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டதற்கான காரணம்.

இந்தச் சூழலில், தொகுதி மறுவரையறைச் சட்டத் திருத்தத்துக்கான மசோதாவை, ஒன்றிய அரசு மீண்டும் கொண்டு வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், 1971 ஆம் ஆண்டிலிருந்து, 2026ஆம் ஆண்டு வரை `ஃப்ரீஷ்' செய்யப்பட்டிருக்கின்ற அந்த `டிலிமிட்டேசன் எக்ஸர்ஸை' மேலும் 25 ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும். அதற்கான புதிய சட்டத் திருத்தம், இந்த ஆண்டு வரவில்லை என்றால், 2027ல் மக்கள் தொகை அடிப்படையில் எம்.பி.க்கள் தொகுதிகள் நிர்ணயம் செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுவிடும்.

**33 சதவிகித மகளிர் இட ஒதுக்கீட்டை ஆதரிக்கிறோம்!**

அப்படி செய்வதற்கான அதிகாரத்தை, அரசியலமைப்பு வழங்கி இருக்கிறது என்று, சட்ட வல்லுநர்கள் தொடர்ந்து கூறி வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், 33 சதவிகித மகளிர் இட ஒதுக்கீட்டை, நாங்கள் முழுமையாக ஆதரிக்கிறோம், வரவேற்கிறோம்.

ஒருவேளை மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவுக்காகத் தொகுதி மறுவரையறை பணி செய்யப்பட்டால், 1971ஆம் ஆண்டு மக்கள்தொகை அடிப்படையிலேயே செய்ய வேண்டும். அதில் ஏதாவது மாற்றம் வந்தால், நாடாளுமன்றத்தில், தமிழ்நாடு எம்.பி.க்களின் விகிதாச்சாரம் இப்போது இருக்கின்ற 7.18 சதவிகிதத்தைக் குறைக்க அனுமதிக்கக்கூடாது என்று மீண்டும் வலியுறுத்திச் சொல்லி, அரசு கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை நாங்கள் வரவேற்கிறோம்.

இவ்வாறு சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

